*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# எட்டுத்தொகையில் நிமித்தங்கள்

**மா.முத்துச்செல்வி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி

## முன்னுரை

*பழந்தமிழ் மக்களின் வாழ்வானது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது எனலாம். ஒரு செயலைத் தொடங்கும் முன்பு நல்ல பொழுது, நல்ல நாள் பார்த்து தொடங்கினர். அவ்வாறு தொடங்குவதன் வாயிலாக நன்மை கிட்டும் என்று நம்பினர். அந்நம்பிக்கையே மக்களை வாழ்வின் அடுத்த நிலைக்கு இட்டுச்சென்றது எனக் கருத இடமுண்டு. பொதுவாக இயற்கைக்கு அப்பாற்பட்ட யாவற்றையும் நம்பிக்கை சார்ந்தவையாகக் கருதினர். நம்பிக்கையிலும் சிலவற்றை நன்மை தருவதாகவும் சிலவற்றை தீமை தருவதாகவும் எண்ணினர். ஆயின் நம்பிக்கை என்பது அச்சத்தின் அடிப்படையில் தோன்றியது எனலாம். தீமைகளிலிருந்து தம்மைக் காப்பதும், நன்மைகளை விரும்புவதுமே மனித இயல்பாகும். இத்தகைய நம்பிக்கைகள் மரபு வழியாக இன்று வரை பின்பற்றப்பட்டு வருகின்றது. பழந்தமிழ் மக்களால் பின்பற்றப்பட்ட நம்பிக்கைகள் பலவும் இன்றைய அறிவியல் உலகில் வாழும் மக்களாலும் பின்பற்றப்படுவதால் அவற்றை மூட நம்பிக்கை என்று கூறி ஒதுக்கி விட இயலாது. ஒவ்வொரு நம்பிக்கைக்கும் ஏதாவதொரு காரண காரியத் தொடர்பு இருந்திருக்கலாம். இவ்வடிப்படையில் எட்டுத்தொகையில் இடம்பெறும் நம்பிக்கைகளுள் ஒன்றான நிமித்தங்கள் குறித்து ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.*

**நிமித்தம்**

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்னர் நல்ல நேரம், நல்ல பொழுது, நன்னிமித்தம் பார்த்து தொடங்குவதை மரபாக பண்டைத் தமிழர் தொடங்கி இன்றைய தமிழர் வரை பின்பற்றப்பட்டு வருகின்றது. நிமித்தம் நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியது எனலாம். நிமித்தமானது சகுனம் என்றும் அழைக்கப்படுகின்றது.. “நிமித்தம் என்பது பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக முன்னுணர்த்துவதாகும்.” (தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்” க.காந்தி, ப.109) என்று நிமித்தம் குறித்து குறிப்பிடப்படுகின்றது. மேலும் ஒரு செயல் தொடங்கும் முன் மக்கள் நன்னிமித்தத்தை பார்த்து தொடங்கும் பழக்கத்தை மேற்கொண்டதையும் அறிய முடிகின்றது.

**தொல்காப்பியத்தில் நிமித்தம்**

நிமித்தம் என்ற சொல் தொடர்பு,நிமித்தம், கூட்டம் என்ற பொருளில் தொல்காப்பியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றை

**“புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே” (தொல்.பொருள்.அகத்.16)**

என்ற தொல்காப்பிய அடிக்கொண்டு அறிய இயலுகின்றது. இங்கு நிமித்தம் என்பது தொடர்பு என்ற பொருளில் கையளாப்பட்டுள்ளது.

**“அச்சமும் உவகையும் எச்சம் இன்றி**
**நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்” (தொல்.பொருள்.அகத்.88:16-17)**

என்ற தொல்காப்பிய அடியில் குறிப்பிடப்படும் நிமித்தம், நிமித்தம் என்ற அதே பொருளையேத் தருகின்றது.

**“பாங்கர் நிமித்தம் பன்னிரண் டென்ப”** (தொல்.பொருள்.அகத்.101)

இங்கு நிமித்தம் என்பது கூட்டம் என்ற பொருளால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தொல்காப்பியத்தில் நிமித்தம் என்ற சொல்லானது நிமித்தம் தவிர்த்த பிற பொருளைக் குறிப்பதை அறியமுடிகின்றது.

சுங்க இலக்கியத்தில் புள் என்ற பறவையைக் குறிக்கும் சொல்லானது, நிமித்தம் என்ற பொருளை உணர்த்தி நிற்பது சிந்திக்கத்தக்கது. பண்டைத் தமிழ் மக்கள் தொடக்க காலத்தில் பறவையைக் கொண்டு நிமித்தம் பார்த்த காரணத்தால் நிமித்தமானது புள் என்ற சொல்லாட்சியால் குறிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

பொதுவாக நிமித்தத்தை பறவைகளின் ஒலி, நாள், கோள், மாந்தர்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு நிமித்தத்தை பகுத்தனர் எனக் கருத இடமுண்டு.




**காக்கை**

காக்கை கரைவதை நன்னிமித்தமாக கருதும் பழக்கம் சங்க காலம் தொட்டு இன்று வரை தொடர்ந்து வருகிறது. பெரும்பாலும் விருந்தினர் வருகையை அறிவிக்கும் விதமாகவே காக்கை குறித்த நிமித்தம் அமைகின்றது. சங்க இலக்கியத்தில் உடன்போக்கு மேற்கொண்ட தனது மகள் தனது தலைவனுடன் தன் இல்லத்திற்கு மீண்டும் வரவேண்டுமென்று நன்னிமித்தமாக கரைய வேண்டுமென்று காக்கைக்கு நற்றாய் உணவளித்ததை,

**“மறு இல் தூவிச் சிறு கருங் காக்கை**
**அன்புடை மரபின் நின் கிளையோடு ஆரப்**
**பச்சூன் பெய்த பைந் நிண வல்சி**
**பொலம் புனை கலத்தில் தருகுவென் மாதோ**
**வெஞ்சின விறல்வேற் காளையொடு**
**அஞ்சில்லோதியை வரக் கரைந்தீமே”** (ஐங்குறு.391.)

என்ற பாடலடிகளின் வாயிலாக அறியமுடிகின்றது. மேலும், காக்கை கரைதலை நன்னிமித்தமாக கருதி அவற்றிற்கு இடும் உணவினை பலியுணவாக அழைக்கும் முறைமையினை,

**“திண்தேர் நள்ளி கானத்து அண்டர்**
**பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி**
**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு**
**எழுகலத்து ஏந்தினும் சிறிதுஎன் தோழி**
**பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு**
**விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே”** (குறுந்.210)

என்ற பாடலடிகளின் வாயிலாக உணரமுடிகின்றது. விருந்து வரக்கரையும் காக்கையினை நன்னிமித்தமாக கருதியுள்ளதை அறிய முடிகின்றது..

**பல்லி நிமித்தம்:**

பல்லி நிமித்தம் குறித்த நம்பிக்கையும் இன்று வரை மக்களிடத்தில் பின்பற்றப்பட்டு வருகின்றது. அந்நிமித்தம், தற்காலத்தில் தான் நினைத்த செயல்நிறைவேறுவதற்கான ஒரு நிகழ்வாக கருதப்படுகின்றது. சங்க இலக்கியத்திலும் அவ்வாறே தலைவனை தலைவி நினைக்கும் பொழுது நன்னிமித்தமாக ஒலித்தது என்று கூறுகின்றாள்.இவற்றை,

**“நீங்குக மாதோ நின்அவலம் ஓங்குமிசை**
**உயர்புகழ் நல்இல் ஒண்சுவர்ப் பொருந்தி**
**நயவரு குரல பல்லி,**
**நள்ளென் யாமத்து, உள்ளுதொறும் படுமே”**(நற்றி.333:9-12)

என்ற நற்றிணைப்பாடலடியின் வாயிலாக உணரமுடிகின்றது மேலும், சங்க இலக்கியத்தில் தலைவன் வரவினை தலைவிக்கு உணர்த்தும் நிமித்தமாகவும் பல்லி நிமித்தம் அமைந்துள்ளமையை,

**“முன்னியது முடித்தனம் ஆயின், நன்னுதல்**
**வருவம் என்னும் பருவரல் தீர,**
**படும்கொல், வாழி, நெடுஞ்சுவர் பல்லி”**(நற்றி. 169: 1-3)

**“எம்மினும் விரைந்துவல் எய்தி, பல்மாண்,**
**ஓங்கிய நல்இல் ஒருசிறை நிலைஇ,**
**பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்”**(அகம்.9: 17-19)

இப்பாடலடிகளின் வாயிலாக சித்திரிக்கப்பட்டுள்ளது. தலைவனை எதிர்பார்த்திருக்கும் தலைவி தன் இல்லத்தில் உள்ள பல்லியின் ஒலியைக் கேட்டு நன்னிமித்தமாகக் கருதி நம்பிக்கையோடு இருந்தமையை மேற்குறிப்பிட்ட நற்றிணைப்பாடல்களின் வாயிலாகவும், அகநானூற்றுப் பாடலடிகளின்

வாயிலாகவும் அறிய முடிகின்றது.

இவ்வாறு பல்லி ஒலி நன்னிமித்தமாக கருதியதை இலக்கியங்களின் வாயிலாக அறிய இயலுகின்றது.பல்லியின் ஒலி நன்னிமித்தமாக அமைந்தமையால் அதனை நடப்பதைக் கூறும் பல்லி, முதுவாய் பல்லி, கணிவாய் பல்லி என்று இலக்கியங்கள் கூட்டுகின்றன.இக்கருத்தை

**“கணிவாய்ப் பல்லி காடிறந் தோரே” (அகம்.151:15)**

**“இரை நசைஇக் கிடந்த முதுவாய்ப்பல்லி”(அகம்.387:16)**

**“நல்லென் யாமத் துள்ளுதொறும் படுமே”(அகம்.333:11-12)**

என்ற பாடலடிகள் கொண்டு அறிய இயலுகின்றது. இவ்வாறு பல்லி நிமித்தமும் நன்னிமித்தமாக எட்டுத்தொகை இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பல்லியானது வீட்டிலேயே இருப்பதால் அது எதார்த்தமாக எழுப்பும் குரலால் நினைத்த செயல் நடைபெற்றிருக்கலாம். அதை மரபாக பின்பற்றபட்டு இந்நிமித்தம் மக்களிடையே பரவி வந்திருக்கலாம் என்ற கருத இடமுண்டு.

**புள் நிமித்தம்:**

மக்கள் தம் வாழ்வில் தாம் நினைத்த செயல் நன்றாக நடக்கும் பொருட்டு நல்ல நாளும் நன்னிமித்தமும் பார்க்கும் பழக்கத்தை மேற்கொண்டனர் எனலாம். பொதுவாக புள் என்பது நிமித்தம் என்ற பொருளிலே சங்க இலக்கியத்தில் வழங்கப்பட்டுள்ளது. புலவர்கள் பரிசில் நாடிச் செல்லுமிடத்து பரிசில் பெறா நிலையில் தான் எதிர்பட்ட பொழுதையும், நிமித்தத்தையுமே பழிப்பரேயன்றி பரிசில் மறுத்த மன்னனை பழிக்க மாட்டார்கள் என்று கூறுபவதிலிருந்து சங்க கால மக்கள் தம் வாழ்வில் புள்ளும் பொழுதும் பார்ப்பதற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது. இவற்றை,

**“ புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
ஊள்ளிவ் சென்றோர்ப் பழியல ரதனாற்
புலவேன்” (புறம்.204:10-12)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது.மேலும், நிமித்தம் பார்த்தல் குறித்து அகநானூற்று பாடலடியும் குறிப்பாக புள்நிமித்தம் குறித்த செய்தியினைக் குறிப்பதை,

**“அம்ம வாழி தோழி கைம்மிகக்
கனவும் கங்குல் தோறு இனிய நனவும்
புனைவினை நல்குல் புள்ளும் பாங்கின’ (அகம்.141.1-3)**

என்ற பாடலடியின் வாயிலாக அறிய முடிகின்றது. மேலும், வண்டின் ஒலியும் நன்னிமித்தமாகவே கருதப்பட்டுள்ளமையை.

**“கருங்கோட்டு புன்னை மலர்தாது அருந்தி
இருங்களி பிரசம் ஊத அவர்
நெடுந்தேர் இன்ஒலி கேட்டலோ அரிதே.” ”(நற்றி.311)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது. சங்க கால மாந்தர்கள் நிமித்தம் பார்ப்பதை வாழ்வின் முக்கிய நிகழ்வாக கருதினர் என்பதை இலக்கியங்களின் வழி நின்று உணர முடிகின்றது.

**ஓந்தி**

பச்சோந்தியின் வாழ்வியலைக் கொண்டும் பழந்தமிழ் மக்கள் நிமித்தம் பார்க்கும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். அதாவது,ஆண் ஓந்தியானது வலப்பக்கமாகச் சென்றால் நன்னிமித்தமாக கருதும் பழக்கத்தை,

**“வேதின வெரிநி னோதி முதுபோத்
சுரனே சென்றனர் காதல ருரணழிந்து
ஈங்கியா னழுங்கிய எவ்வம்
படி யாங்கறிந் தன்றிவ் வழுங்க லூரே” (குறுந்.140)**

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிய இயலுகின்றது. மேலும், பச்சோந்தியானது பாலை நிலத்தில் மட்டும் உள்ள உயிரினமாகும். எனவே இவற்றை பாலை நிலமக்கள் நிமித்தம் பார்ப்பதற்கு பயன்படுத்தியுள்ளமையை அறிய முடிகின்றது.

சங்க இலக்கியத்தில் நிமித்தம் பார்ப்பதற்கு காக்கை, பல்லி, ஓந்தி நன்னிமித்தமாக கருதினமையை அறிய இயலுகின்றது. பொதுவாக மக்கள் நிமித்தம் பார்த்தலினை நோக்கும் போது அவை அச்ச உணர்வின் வெளிப்பாடு என்பதை அறிய இயலுகின்றது. காக்கை கரைதல் விருந்தினர் வருகையை அறிவிக்கும் விதமாக கருதியமை சங்க காலத்தில் மட்டும் அன்றி இக்காலத்திலும் மக்களால் பின்பற்றப்படுவதால் இவை அன்றைய நடப்பியலை புலப்படுத்துகிறது என்று அறியலாம். மேலும் புள் நிமித்தம், ஓந்தி குறித்த நம்பிக்கை போன்றவையும் இக்கால கட்டத்தில் வாழும் மக்களாலும் பின்பற்றப்படுவதால் அவை அன்றைய மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் விதமாகவே இத்தகைய இலக்கியங்கள் அமைந்துள்ளன எனலாம்.